# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்:** 123/மா/**2025**

**நாள்: 04.02.2026**

| | | |
|---|---|---|
| A.J. ஆரோக்கிய ஜெயசாமி,<br>சென்னை. | --- | முறையீட்டு மனுதாரர் |
| ஆணையர்,<br>தாம்பரம் மாநகராட்சி. | --- | எதிர்மனுதாரர் |

சென்னை–75, பம்மல், எல்.ஐ.சி காலனி விரிவாக்கம், அன்னை தெரசா தெரு, பிளாட் எண் 38 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. A. J. ஆரோக்கிய ஜெயசாமி என்பவரின் 19.03.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 20.03.2025 அன்று பெறப்பட்டு 123/மா/2025 என எண்ணிட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை–75, பம்மல், எல்.ஐ.சி காலனி விரிவாக்கம், அன்னை தெரசா தெரு, பிளாட் எண் 38 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. A. J. ஆரோக்கிய ஜெயசாமி என்பவர் தனது 19.03.2025 நாளிட்ட மனுவில் “THE HINDU” 12.01.2025 நாளிட்ட செய்தித் தாளின் நறுக்கினை இணைத்து அனுப்பியுள்ளார். அதில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:–

> “For the past few years, a vacant Plot on Annai Theresa Street, LIC Colony Extn. in Pammal, resembles a Jungle. The Plot is overrun with vegetation and is used as a dumping ground. Sometime, snakes enter the adjoining homes, striking fear among residents. The locality has become a home to the strays. The Pammal Zone of the Tambaram City Municipal Corporation should make arrangments to sterilise and vaccinate the dogs. At the entrance of Srinivasan Street, cyclinder kept in thie open should be removed.”

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 23.04.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் தாம்பரம் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது. ஆனால் தாம்பரம் மாநகராட்சி ஆணையரிடமிருந்து அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. இருப்பினும், இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 30.12.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 17.12.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. இந்நிலையில், தாம்பரம் மாநகராட்சி ஆணையாளர் தனது 29.12.2025 நாளிட்ட கடிதம் ந.க. எண் 1522/2025/எச்1–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

> "தாம்பரம் மாநகராட்சி, மண்டலம் எண் 1, வார்டு 6–க்குட்பட்ட பகுதியில் வசிக்கும் திரு. A. J. ஆரோக்கிய ஜெயசாமி என்பவரின் புகாரில் பம்மல் எல்.ஐ.சி காலனி விரிவு எண் 37, அன்னை தெரசா தெரு பகுதியில் அமைந்துள்ள காலி மனையில் குப்பை கொட்டுவதாகவும், செடி, கொடி படர்ந்து காடு போல் காட்சியளிப்பதாகவும், இதனால் அருகில் வசிக்கும் வீடுகளுக்குள் விஷ பூச்சிகள் வருவதாக புகார் அளித்துள்ளார். எனவே மேற்படி புகார் தெரிவிக்கப்பட்ட காலிமனை உரிமையாளருக்கு 26.12.2025 அன்று அறிவிப்பு வழங்கப்பட்டது. காலிமனை உரிமையாளர் அறிவிப்பினை ஏற்று 10 நாட்களுக்குள் சுத்தம் செய்து தருவதாக எழுத்துபூர்வமாக கடிதம் அளித்துள்ளார். காலி மனையிலிருந்து சாலை வரை வளர்ந்துள்ள செடி, கொடிகளை தாம்பரம் மாநகராட்சி பணியாளர்கள் கொண்டு அகற்றப்பட்டது. மேலும் 29.12.2025 காலிமனையில் சுத்தம் செய்யும் பணி, இட உரிமையாளர் மூலம் நடைபெற்றுக் கொண்டு வருகிறது என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

5. மனுதாரர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 30.12.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

> "கடந்த பல வருடங்களாக, பம்மலில் உள்ள எல்.ஐ.சி காலனி விரிவாக்கத்தில் உள்ள அன்னை தெரசா தெருவில் உள்ள ஒரு காலி நிலம், காடு போல் உள்ளது. அந்த நிலம் செடிகளால் நிரம்பியுள்ளது மற்றும் குப்பை கொட்டும் இடமாக பயன்படுத்தப்பட்டு வந்தது. தற்போது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் அளிக்கப்பட்ட புகார் தொடர்ச்சியாக காலிமனை உரிமையாளர், அவ்விடத்தை சுத்தம் செய்து விட்டார். மேலும் தாம்பரம் மாநகராட்சியால் சாலையில் மண்டியிருந்த செடிகள் அகற்றப்பட்டு விட்டன என்று மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களுக்கு தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இருப்பினும், அருகில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் வசிப்பவர்கள் அந்த காலியிடத்தில் குப்பை கொட்டுவதை தடுக்குமாறு தாம்பரம் மாநகராட்சிக்கு உரிய உத்தரவினை வழங்கிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்."

6. எதிர்மனுதாரர் தரப்பில் தாம்பரம் மாநகராட்சியின் சுகாதார ஆய்வாளர் 30.12.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

> "மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள மனை கள ஆய்வு செய்யப்பட்டு மேற்படி புகாரில் தெரிவிக்கப்பட்ட காலிமனை உரிமையாளருக்கு 26.12.2025 அன்று அறிவிப்பு வழங்கப்பட்டது. காலி மனை உரிமையாளர் அறிவிப்பினை ஏற்று 10 நாட்களுக்குள் சுத்தம் செய்து தருவதாக எழுத்து பூர்வமாக கடிதம் அளித்துள்ளார். காலி மனையிலிருந்து சாலை வரை வளர்ந்துள்ள செடி, கொடிகளை தாம்பரம் மாநகராட்சி பணியாளர்கள்

கொண்டு அகற்றப்பட்டது. மேலும் 29.12.2025 அன்று காலிமனை உரிமையாளர் மூலம் அவ்விடம் சுத்தம் செய்யப்பட்டு விட்டது. மேலும், தற்போது மனுதாரர் தனது வாக்குமூலத்தில் அடுக்குமாடி குடியிருப்பில் வசிப்போர் அந்த காலியிடத்தில் குப்பை கொட்டுவதை தடுக்குமாறு கோரியுள்ளதற்கு, அடுக்குமாடி குடியிருப்போர்களுக்கு உரிய விழிப்புணர்வும், எச்சரிக்கையும் தாம்பரம் மாநகராட்சியால் வழங்கப்படும் என்றும், அங்கு குப்பை கொட்டுவதை தடுக்க தொடர் கண்காணிப்பும் செய்யப்படும் என்பதையும் இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.''

7. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான தாம்பரம் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் சுகாதார ஆய்வாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

கடந்த பல வருடங்களாக, பம்மலில் உள்ள எல்.ஐ.சி காலனி விரிவாக்கத்தில் உள்ள அன்னை தெரசா தெருவில் உள்ள ஒரு காலி நிலத்தில் செடிகளால் நிரம்பி காடு போல் இருந்ததால், அந்த நிலம் குப்பை கொட்டும் இடமாக பயன்படுத்தப்பட்டு வந்தது என்பதும், தற்போது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் அளிக்கப்பட்ட புகாரின் தொடர்ச்சியாக காலிமனை உரிமையாளர், அவ்விடத்தை சுத்தம் செய்து விட்டார் என்பதும், தாம்பரம் மாநகராட்சியால் சாலையில் மண்டியிருந்த செடிகள் அகற்றப்பட்டு விட்டன என்பதும், இருப்பினும், அருகில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் வசிப்பவர்கள் அந்த காலியிடத்தில் குப்பை கொட்டுவதை தடுக்குமாறு தாம்பரம் மாநகராட்சிக்கு உரிய உத்தரவினை வழங்கிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள மனை கள ஆய்வு செய்யப்பட்டு மேற்படி புகாரில் தெரிவிக்கப்பட்ட காலிமனை உரிமையாளருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டதன் அடிப்படையில் காலி மனை உரிமையாளர் 10 நாட்களுக்குள் சுத்தம் செய்து தருவதாக எழுத்து பூர்வமாக கடிதம் அளித்துள்ளார் என்பதும், காலி மனையிலிருந்து சாலை வரை வளர்ந்துள்ள செடி, கொடிகளை தாம்பரம் மாநகராட்சி பணியாளர்கள் கொண்டு அகற்றப்பட்டது என்பதும், 29.12.2025 அன்று காலிமனை உரிமையாளர் தன்னுடைய காலிமனையிடத்தினை சுத்தம் செய்து விட்டார் என்பதும், தற்போது மனுதாரர் தனது வாக்குமூலத்தில் அடுக்குமாடி குடியிருப்பில் வசிப்போர் அந்த காலியிடத்தில் குப்பை கொட்டுவதை தடுக்குமாறு கோரியுள்ளதற்கு, அடுக்குமாடி குடியிருப்போர்களுக்கு உரிய விழிப்புணர்வும், எச்சரிக்கையும் தாம்பரம் மாநகராட்சியால் வழங்கப்படும் என்பதும், அங்கு குப்பை கொட்டுவதை தடுக்க தொடர் கண்காணிப்பும் செய்யப்படும் என்பதும் எதிர்மனுதாரரான தாம்பரம் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் சுகாதார ஆய்வாளரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், தாம்பரம் மாநகராட்சி, மண்டலம் எண் 1, வார்டு 6, பம்மல், எல்.ஐ.சி காலனி விரிவு எண் 37, அன்னை தெரசா தெருப் பகுதியில் அமைந்துள்ள காலி மனையில் செடிகளால் நிரம்பியிருந்த இடத்தை காலி மனை உரிமையாளரைக் கொண்டு சுத்தம் செய்யப்பட்டு உள்ளது. காலிமனையிலிருந்து சாலை வரை மண்டியிருந்த செடிகள் தாம்பரம் மாநகராட்சியால் அகற்றப்பட்டு உள்ளது. இருப்பினும், மனுதாரர் தன்னுடைய வாக்குமூலத்தில் மேற்கண்ட பகுதியின் அருகில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் வசிப்பவர்கள், மேற்படி காலியிடத்தில் குப்பை கொட்டுவதைத் தடுக்கக் கோரியது குறித்து, அடுக்குமாடி குடியிருப்போர்களுக்கு உரிய விழிப்புணர்வும்,

எச்சரிக்கையும் மற்றும் அங்கு குப்பை கொட்டுவதை தடுக்க தொடர் கண்காணிப்பும் செய்யப்படும் என்றும் தாம்பரம் மாநகராட்சியின் சுகாதார ஆய்வாளரின் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு, உரிய நடவடிக்கையினை விரைவில் மேற்கொள்ளுமாறும் தாம்பரம் மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 04--ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

(1) திரு. A. J. ஆரோக்கிய ஜெயசாமி,
பிளாட் எண் 38,
அன்னை தெரசா தெரு,
எல்.ஐ.சி காலனி விரிவாக்கம்,
பம்மல்,
சென்னை–600 075.

(2) ஆணையர், தாம்பரம் மாநகராட்சி,
28 முத்துரங்கம் தெரு,
தாம்பரம் மேற்கு,
சென்னை–600 045.

(3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

(4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

5/2/26
செயலாளர்
5/2/26

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032